மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

முன்னிலை திருமதி.S. முத்துலெட்சுமி, B.A.,M.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்.

2024 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் நாள் திங்கள்கிழமை

அசல் வழக்கு எண்.195/2022

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம், திருவள்ளுவர் தெரு, எண்.4/76, என்ற முகவரியில் இயங்கி வரும், கனரா வங்கி, ஸ்ரீவைகுண்டம் கிளை, அதன் கிளை மேலாளர் மூலமாக ... வாதி

/ எதிர் /

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தாலுகா, பத்மநாபமங்கலம், தேவர் சிலை தெரு, எண்:2/78 என்ற முகவரியில் வசிக்கும் வைகுண்டம் அவர்கள் குமாரர், 55 வயதுள்ள, V. செந்தூர்பாண்டி. ... பிரதிவாதி

இவ்வழக்கானது வாதி வங்கிக்கு பிரதிவாதி கடன் நிலுவை தொகை ரூ. 65,228/−ஐ செலுத்தும்படிக்கும், 10.25% வட்டி செலுத்தும்படிக்கும், 2% அபாரத வட்டி செலுத்தும்படிக்கும் மற்றும் செலவுத்தொகை கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கலான நாள் : 21.09.2022

கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் : 22.09.2022

வழக்கு மூலம் நேரிட்ட நாள் : 20.12.2014, 15.12.2017, 09.12.2020, ஸ்ரீவைகுண்டத்தில் வைத்து உண்டாகி இருக்கிறது.

ஆள்வரை மதிப்பு : பரிகாரம் ரூ. 65,228/–

நீதிமன்ற முத்திரைக்கட்டணம் : பரிகாரம் ரூ. 1957/–தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக்கட்டணம் சட்டம் பிரிவு 22 ன்படி செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 08.04.2024 தேதி அன்று இறுதி விசாரணைக்கு வந்ததில் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.ஜனார்த்தனன்., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கண்ணன் விஸ்வநாத் அவர்கள் ஆஜராகியும், வா.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்த சமயத்தில் பிரதிவாதி தரப்பில் பிரதிவாதியை அழைக்கலாம் என மேலெழுத்து செய்யப்பட்டதன் அடிப்படையில் பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் பிரதிவாதி ஒருதலைபட்சமாக்கப்பட்டும் வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்பாணை**

| | |
|---|---|
| 1. | தாவா கீழ்கண்டவாறு அனுமதித்து தீர்ப்புரைக்கப்படுகிறது. |
| 2. | பிரதிவாதி கடன் நிலுவைத்தொகை ரூ.65,228/–ஐ வாதி வங்கிக்கு செலுத்தும்படிக்கு தீர்ப்புரைக்கப்படுகிறது. |
| 3. | பிராது காலம் முதல் கடன் நிலுவைத் தொகையை திரும்ப செலுத்துகிற காலம் வரையிலுமான காலத்திற்கு கடன் அசல் தொகைக்கு 3% வட்டி செலுத்தும்படிக்கு தீர்ப்புரைக்கப்படுகிறது. |
| 4. | செலவுத் தொகை இல்லை |

(வாதி பக்கம் செலவு தொகை ரூ. 5,597/-)

(பிரதிவாதி தரப்பில் செலவு தொகை விபரபட்டியல் தாக்கல் இல்லை)

<u>செலவு தொகை விபரபட்டியல்</u>

| வ.எண். | செலவு தொகை விபரம் | வாதி தரப்பு ரூ. |
|---|---|---|
| 1. | நீதிமன்றமுத்திரைக் கட்டணம் | ரூ.1957/- |
| 2. | வக்காலத்து | ரூ.10/- |
| 3. | சம்மன் படி | ரூ. 30/- |
| 4. | தட்டச்சுக் கூலி | ரூ. 100/- |
| 5. | முதுநிலை வழக்கறிஞர் கட்டணம் | ரூ. 3000/- |
| 6. | இளநிலை வழக்கறிஞர் கட்டணம் | ரூ. 500/- |
| | மொத்தம் | ரூ. 5,597/- |

2024 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ம் நாளாகிய இன்று என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

Sd/-திருமதி.S.முத்துலெட்சுமி, B.A.,M.L.,
15.04.2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.